அவர்களுக்கு நூல் தருகிற முயற்சியில் தோல்வியடைந்திருக்கிறது. நாமாக ஒப்பந்தம் செய்து இடைக்காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கலைத் தீர்ப்பதற்காக எல்லா ஆலைகளும் நம்மிடத்தில் ஒப்படைக்க முன்வந்தபோது இப்போது அவர்கள் போட்ட உத்தரவால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் ஒப்பந்தம் செய்துகொண்டு ஏற்கெனவே கூறியபடி நாலாயிரத்திற்கு மேற்பட்ட பேல்கள் வாங்கி விநியோகிக்கப்பட்டது. இதற்குப்பின் சட்டப்படி நாங்கள் வாங்கப் போகிறோம் என்று சொல்லிவிட்டு சட்டப்படி உள்ள உத்தரவைப் போட இவ்வளவு காலதாமதம். 29-ம் தேதி நமக்கு உத்தரவு வந்திருக்கிறது.

இன்று காலை நானே நேரில் தொடர்பு கொண்டேன். எங்களுக்கு உத்தரவு வரவில்லை, உத்தரவு வந்தால்தான் நாங்கள் தரமுடியும் என்று சொல்கிறார்கள். இதன் விளைவு கிட்டத்தட்ட, அவர்கள் தந்த தகவல்படி மூன்று கோடியிலிருந்து நான்கு கோடி வரை நம் தமிழ்நாட்டு ஆலைகளில் நூல் தேங்கிக் கிடக்கிறது. ஆனால் நெசவாளர்களுக்கு நூல் கொடுக்கமுடியாத துர்ப்பாக்கியத்தில் நாம் இருக்கிறோம்.

7. அறிவிப்புகள்.

(அ) நடைமுறை விதிக்குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக் குழுக்கள் பற்றி அறிவிப்புகள். மு.ப. 11-00

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ் 1973-74 ஆம் ஆண்டுக்கு பின்னரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி, முதலமைச்சர்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்.

3. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழிலமைச்சர்.

4. பேரவைத் துணைத் தலைவர்.

5. திரு. து. ப. அழகமுத்து.

6. திரு. துரைமுருகன்.

7. திரு. ஜி. ராஜாராம்.
8. திரு. பி. எஸ். மணியன்.
9. திரு. எம். கந்தசாமி.
10. திரு. கே. டி. கே. தங்கமணி.
11. திரு. க. உரோ. எட்மண்ட்.
12. திரு. எஸ். முகமதுகாதர் முகைதீன்.
13. திரு. ஏ. சுப்பிரமணியம்.
14. டாக்டர் எச். வி. ஹாண்டே.
15. திரு. கே. கந்தசாமி.
16. திரு. என். டென்னிஸ்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(ஆ) அவையினர் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1973-74-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்கு சட்டப் பேரவையின் பதின்மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் :—

1. திரு. எஸ். அழகுத் தேவர்.
2. திரு. எம். சுரேந்திரன்.
3. திரு. நா. கிருட்டிணன்.
4. திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்.
5. திரு. எம். சத்தியமூர்த்தி.
6. திரு. எஸ். கே. சுப்ரமணியம்.
7. திரு. வி. சுப்ரமணியம்.
8. திரு. ஆ. கு. சுப்பையா.
9. திரு. குழ. செல்லையா.
10. திரு. ஏ. சி. நரசிம்மன்.
11. திரு. வி. முத்து.
12. திரு. பி. வெங்கடசாமி.
13. திரு. கே. ஏ. வகாப்.